This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# இளமையில் கொல்!

www.writersujatha.com

## 1

கதிர்வேலன் என்னைக் காலையிலே பார்க்க வந்தான். அவன்கிட்ட செண்ட் வாசனை அடிச்சுது. "ஏண்டா இத்தனை காலையில் சேட்டுப் பையன் மாதிரி வாசனையா வரையே?"ன்னு கேட்டேன். அவன் அதுக்குப் பேசாம இந்தப் பக்கம், அந்தப் பக்கம் பார்த்து, "உன் கூடத் தனியா பேசணும்"ன்னான். கையிலே அனுபமா அனந்த்தை 19.4.81ல் கல்யாணம் பண்ணிக் கிட்டப் போது கொடுத்த பை வெச்சிருந்தான்.

கதிர்வேலனுக்கு என் வயசுதான் இருக்கும். என்ன வேலை செய்கிறான், எங்கே போறான், எப்ப வருவான் எதுவும் சொல்ல முடியாது. ஆனா எனக்கு டியர் சிநேகிதன் தான். திடீர்னு கடன் கேட்பான். திடீன்னு திருப்பிக் கொடுப்பான். கதிர்வேலனைப் பற்றி எதுவுமே தீர்மானமா சொல்லிட முடியாது. அவன் சிநேகிதம் கூடாதுன்னு எங்க அண்ணி அப்பப்ப அதட்டிச் சொல்லிக்கிட்டே இருப்பாங்க.

அதனாலேயே நான் அவன் கூட சாவகாசம் வைச்சுக்க யோசனை செய்தேன். "ஒரு நா இல்லாட்டி ஒரு நா அந்த ஆளாலே இம்சைப்பட போறே"ன்னு அண்ணனும் சொல்லுவாங்க. எனக்கு அப்பா, அம்மா கிடையாது. அண்ணன்கிட்டே வசிக்கிறேன். அப்படி ஒண்ணும் அன்பு, பாசம் எதுவும் கிடையாது. தண்டச்சோறுன்னு திட்றத்துக்குள்ளே எனக்கு வேலை கிடைச்சுடும்னுதான் நம்பிக்கை. எல்லா இடத்திலேயும் மனுப் போட்டும் வெறும், பி.காம், அதுவும் செகண்ட் கிளாஸுக்கு வாய்ப்பே இல்லை. அடையாறு பிலிம் இன்ஸுட்லே சேரலாம்னு உத்தேசம். ஒரு ஆளு ரெண்டாயிரம் கொடுத்தா எடிட்டிங் கிளாசிலே அட்மிஷன் வாங்கித் தரேன்னு சொல்லியிருக்காரு. ரெண்டாயிரமா?

கதிர்வேலன் என்னை கூட்டிக்கிட்டு மூலைக்கடை வரைக்கும் போனான். என்னைத் தனியாக் கூப்பிட்டு அந்தப் பையைத் திறந்து காட்டினான். அதுக்குள்ள ஒண்ணு ரெண்டு நூறு ரூபா நோட்டா இருந்தது! செண்ட்டு பாட்டில் ஒண்ணு கொஞ்சம் பழசாக் காணப்பட்டது. ஆனா தங்கத்திலேயே நகைகள் எல்லாம் கும்பலா இருந்தது.

"இது என்ன கதிரு?"

"இதை வாங்கி வச்சுக்க. பத்திரமா ஒளிச்சு வச்சுக்க. நான் பம்பாய்க்குப் போய்கிட்டே இருக்கேன். அங்கே ஒரு ஜோலி இருக்குது. போய் வந்ததும் வாங்கிக்கிறேன்"ன்னான்.

"கதிரு, இது யார்து?"

"என்னுதுதாண்டா, வீட்லே வெள்ளை அடிச்சுக்கிட்டு இருக்காங்க. அதனாலே உன்கிட்ட கொடுத்துட்டுப் போறேன். செண்ட்டு பாட்டிலை வேன்னா எடுத்துக்கோ, உங்க அண்ணிக்கிட்ட கொடு."